முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1654

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.04.2024,** செவ்வாய்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
கலித்துன்பம் போக்க வந்த தேசிகனே
தர்மபலம் கொண்ட அரங்கனே
தவசியே ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 27 ம் நாள், 09.04.2024, செவ்வாய்கிழமை)
ஆசிதந்து அரங்கன் உன் சக்திபெருக்க
ஆற்றல்பட ஆறுமுகன் யான் துணைபுரிகின்றேன்
3. துணைபுரிய தொடர்ந்து அரங்கனுக்கு பிரம்ம வேளையில்
சூட்சுமமாய் மகா சக்திகள் வழங்கி
இணையில்லா ஞானியாக இந்த கலியுகத்தில்
இனிதே அரங்கனுக்கு தனிப்பெரும் தன்மை கூட்டி வருகின்றேன்
4. வருகவே அரங்கன் தொண்டர்படை
வையகத்தை ஆளுவது உறுதி
பெருமைமிக்க அரங்கன் தர்மம்
பேருலகை காத்துவருவதும் உறுதி
5. உறுதிகொண்டு அரங்கனோடு உலகோர்
ஒன்றிணைந்து ஞானம் பயின்றால்
கருதிவந்து ஏற்கும் மக்களெல்லாம்
கலியுகத்தில் ஞானிகளாக சக்திபெருகி
6. பெருகியே உலகமாற்றத்தை
பிசகின்றி அரங்கன் அவதார நோக்கமாக
தர்மப்படி உலகோர் நடத்தி
தரணியில் அற்புதம் காண நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—